## உங்கள் பிள்ளைக்குச் சொல்லிக் கொடுக்கவும்

8 உங்களால் பிள்ளையின் அச்சங்களைப் போக்காதிருக்க முடியாது என்றும், ஆகவே அவற்றை உங்களிடம் தெரிவிக்க வேண்டும் என்றும் சொல்லி வைக்கவும்.



## உங்கள் பிள்ளைக்குச் சொல்லிக் கொடுக்கவும்

9 பொலிசார் பிள்ளையின் உற்ற நண்பர் என்றும், பிள்ளை வழிதவறுமிடத்து அல்லது அதற்கு உதவி தேவைப்படுமிடத்து பொலிசாரை நம்பி உதவி நாடலாம் என்றும் அதனிடம் சொல்லி வைக்கவும்.



## உங்கள் பிள்ளையைப் பாதுகாக்கவும்

## உங்கள் பிள்ளைக்குச் சொல்லிக் கொடுக்கவும்

10 தனித்துப் பயணம்செய்யவோ விளையாடவோ கூடாது என்றும், எப்பொழுதும் நண்பர்களுடனேயே இருக்கவேண்டும் என்றும் சொல்லி வைக்கவும்.



## உங்கள் பிள்ளைக்குச் சொல்லிக் கொடுக்கவும்

- பிள்ளை தனது சொந்த உணர்வுகளை நம்பி நடக்கவேண்டும் என்றும், வயதுமிகுந்தவர் ஒருவர் கேட்பதை, குறிப்பாக அவர் கேட்கும் தவறான காரியத்தைச் செய்வதற்கு மறுப்பு தெரிவிக்கவேண்டும் என்றும்,
- முன்பின் தெரியாதவர் கொடுக்கும் அன்பளிப்புகளை ஏற்கக்கூடாது என்றும்,
- வயதுமிகுந்தவர் வயதுகுறைந்தவரிடம் உதவி கேட்பது அரிது என்றும்,
- பெற்றோரிடம் ஓர் இரகசியத்தைத் தெரிவிக்கக்கூடாது என்று எவராவது சொன்னாலும், அதைப் பெற்றோரிடம் தெரிவிக்கவேண்டும் என்றும்,
- பிள்ளையின் நீச்சலுடையினுள் மறையும் உறுப்புக்கள் எவற்றையும் தொடுவதற்கு எவர்க்கும் உரிமை இல்லை என்றும்,
- யாராவது பின்தொடரந்தால் வீட்டுக்கு ஓடிவர வேண்டும் அல்லது கிட்ட உள்ள பொது இடத்துக்குப் போய் உதவிகேட்டுக் குரலெழுப்ப வேண்டும் என்றும்,
- கட்டடத்துப் பெற்றோர் இன்னார் என்றும், அவர்களுடைய அடையாளம் இன்னது என்றும்,
- எவராவது சந்தேகத்துக்கிடமான முறையில் அணுகினால், அவரைப்பற்றி உங்களிடமோ பாடசாலை அதிகாரிகளிடமோ பொலிசாரிடமோ தெரிவிக்க வேண்டும் என்றும்,
- உங்கள் அனுமதியின்றி எவருடைய வீட்டுக்கும் போகக்கூடாது என்றும்,
- கைவிடப்பட்ட கட்டடங்களிலோ தனிமையான இடங்களிலோ விளையாடக் கூடாது என்றும்,
- குறுக்குவழி நாடிச் சோலைகள், வயல்களை ஊடறுத்துச் செலவதைத் தவிர்க்கவேண்டும் என்றும்,
- தொலைபேசி மூலம் வீட்டுடன் தொடர்பு கொள்வதற்குப் போதிய பணம் வைத்திருக்க வேண்டும் என்றும்,
- பணத்தை எவர்க்கும் காட்டக்கூடாது என்றும், பணத்துக்காக எவரும் தாக்கினால் பணத்தைக் கொடுத்து, காயப்படாது தப்பிக்கொள்ள வேண்டும் என்றும்,
- பேரங்காடிகளிலோ விற்பனைமாடங்களிலோ கைநழுவிப்போனால், நேரே ஒரு காசாளரிடமோ கொள்வனவு அனுமதிக்கும் பணியாளரிடமோ சென்றுவிடவேண்டும் என்றும் சொல்லிவையுங்கள்.



## மேலும் நீங்கள் செய்ய வேண்டியவை

- உங்கள் பிள்ளையை யார்யாருடன் வெளியேற அனுமதிக்கலாமோ, அவர்களுடைய பெயர்களைப் பாடசாலைகளுக்கும் பிள்ளைப் பராமரிப்பு நிலையங்களுக்கும் தெரிவிக்கவும். அத்துடன் பிள்ளை வீடுவந்து சேராவிட்டால் யாருக்கு அறிவிக்கவேண்டும் என்றும் தெரிவிக்கவும்.
- ஒவ்வொரு நாளும் உங்கள் பிள்ளையைக் கவனமாக அவதானித்து, அது எதனை அணிகிறது என்பதை அறியவும்.
- பிள்ளையின் பெயரை அறிந்தவர், பெயர் சொல்லி அழைப்பவர் எவர்க்கும் அது அஞ்சுவது குறைவு. ஆதலால் பிள்ளையின் பெயர் பொறித்த ஆடைகளையும், பாவைகளையும தவிர்க்கவும்.
- உங்கள் பிள்ளையைக் கவனிப்பவராகவோ அதன் வயதுமிகுந்த நண்பராகவோ விளங்கப் போகிறவர் அனைவரையும் சீர்தூக்கிப் பார்க்கவும்.
- உங்கள் பிள்ளையை ஒரு பொது இடத்திலோ தள்ளுவண்டியிலோ காரிலோ தனியே இருக்கவிட்டுச் செல்லக்கூடாது.



- பிள்ளைகள் ஒரு பொது இடத்திலுள்ள கழிப்புக் கூடத்துக்குச் சென்றால் கூடச் செல்லவும். அத்தகைய கூடங்களிலோ அவற்றை அண்டியோ அலைந்து திரிய வேண்டாம் என்று அவர்களிடம் சொல்லி வைக்கவும்.

## பிள்ளையைக் காணவில்லை

### பெற்றோர் / பாதுகாவலர் என்ன செய்ய வேண்டும்?

- உங்கள் வீட்டிலும் சுற்றாடலிலும் கவனமாகவும் திருப்திகரமாகவும் தேடிப்பார்க்கவும்.
- சேர்ந்து விளையாடுவோரிடம் விசாரித்துப் பார்க்கவும்.
- பிடித்தமான விளையாட்டிடங்களில் தேடிப்பார்க்கவும்.
- நண்பர்கள், அயலவர்கள், உறவினர்கள் அனைவருடனும் தொடர்புகொள்ளவும்.
- **கூடிய சீக்கிரம் பொலிசாருடன் தொடர்பு கொள்ளவும். பின்வரும் விபரங்களைக் கொடுப்பதற்கு ஆயத்தமாய் இருக்கவும்:**

✔ முழு உடலமைப்பு விபரம்.

✔ பிறவி அடையாளங்கள், பிற அடையாளங்கள்.

✔ கடைசியாக எடுத்த புகைப்படம்.

✔ காணாமல் போனபோது அணிந்திருந்த உடை.

✔ சுகயீனங்கள்.

✔ வீட்டிலோ பாடசாலையிலோ சேர்ந்து விளையாடுவோருடன் கடைசியாக ஏற்பட்ட பிரச்சனைகள்.

✔ உங்கள் (முன்னாள்) துணைவர் பிள்ளையைக் கடத்திச் செல்லும் வாய்ப்பு இருப்பதாக வைத்துக் கொள்வோம். அப்படியாயின், பிள்ளையிடம் சொந்தமாகக் கடவுசீட்டு இருக்கிறதா? அல்லது அந்தத் துணைவரின் கடவுச்சீட்டில் பிள்ளையின் பெயர் சேர்க்கப்பட்டுள்ளதா?

✔ பிள்ளை ஓடுகாலி ஆகும் வாய்ப்பு உள்ளதாக வைத்துக் கொள்வோம். அப்படியாயின், பிள்ளைக்குப் பிடித்தமான உடைகள், உடைமைகள் என்னென்ன காணவில்லை?

**இதனையோ வேறு குற்றத் தடுப்புத் திட்டங்களையோ குறித்து மேலதிக விபரங்களுக்கு ரொறொன்ரோ பொலிஸ் சேவையுடன் தொடர்பு கொள்ளவும். அதன் தொலைபேசி இலக்கம் 808-2222**

SP307-T, 1999/01 • Protect Your Child (Tamil)

# உங்கள் பிள்ளையைப் பாதுகாக்கவும்



மேலும் உங்கள் பிள்ளையைப் பாதுகாப்பதற்காக பிள்ளை அடையாளப் பதிவேடு ஒன்றை நிரப்பிக் கொடுக்கவும். அதனை உங்கள் பகுதிக்குரிய பொலிஸ் நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## உங்கள் பிள்ளைக்குச் சொல்லிக் கொடுக்கவும்

1 அதன் பெயர், வயது, தொலைபேசி இலக்கம், விலாசம், நகரம், மாகாணம் முதலியவற்றைச் சொல்லிக் கொடுக்கவும்.

**அத்துடன்**

2 அவசரம் ஏற்படுமிடத்து உங்களுடனும் பொலிசாருடனும் தீயணைப்புத் திணைக்களத்துடனும் நோயாளர் வண்டிச் சேவையுடனும் தொடர்புகொள்வது எப்படி என்பதைச் சொல்லிக் கொடுக்கவும்.




## உங்கள் பிள்ளைக்குச் சொல்லிக் கொடுக்கவும்

3 எப்பொழுதும் தான் இருக்கும் இடத்தை உங்களுக்குத் தெரியப்படுத்தும் விதத்தைச் சொல்லிக் கொடுக்கவும்.

**அத்துடன்**

4 தொலைபேசியில் மறுமொழி கூறும்பொழுது வீட்டில் தனியே இருப்பதாகப் பிறரிடம் தெரிவிக்கக்கூடாது என்றும் சொல்லிக் கொடுக்கவும்.

**அத்துடன் ...**

5 வீட்டில் தனியே இருக்கும்பொழுது முன்பின் தெரியாதவர்களை உள்ளே வரவழைக்கக்கூடாது என்றும், கதவு தட்டினால் திறக்கக் கூடாது என்றும் சொல்லி வைக்கவும்.



## உங்கள் பிள்ளைக்குச் சொல்லிக் கொடுக்கவும்

6 முன்பின் தெரியாதவரின் காரை அணுகவோ, காரினுள் ஏறவோ கூடாது என்றும் சொல்லிவைக்கவும்.

**அத்துடன்**

7 முன்பின் தெரியாதவரின் வாகனத்தை மறித்து ஏறிப் போகக்கூடாது என்றும் சொல்லி

